செய்தி வெளியீடு எண்: 946 நாள்:10.12.2020

# செய்தி வெளியீடு

## மாநில பட்டியலினத்திலுள்ள 7 உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களை தேவேந்திரகுல வேளாளர் என பொதுப் பெயரிட மத்திய அரசுக்கு பரிந்துரைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களுக்கு பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர்

தமிழ்நாட்டில் பட்டியல் இனத்திலுள்ள தேவேந்திரகுலத்தார், கடையர், காலாடி, குடும்பர், பள்ளர், பண்ணாடி ஆகிய சாதிகளை உள்ளடக்கி தேவேந்திரகுல வேளாளர் என்று ஒரே பெயரில் பொதுப் பெயரிடக் கோரி பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு வரப்பெற்றன. கோரிக்கைகளை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைக்க மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரி திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைத்து, 4.3.2019 அன்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. இந்தக் குழு தனது பரிந்துரையை அரசுக்கு வழங்கியுள்ளது. பல்வேறு தரப்பினரது கோரிக்கைகள் மற்றும் சென்னை பல்கலைக்கழக மானுடவியல் அறிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, **1. தேவந்திரகுலத்தார், 2. கடையர், 3. காலாடி, 4. குடும்பர், 5. பள்ளர், 6. பண்ணாடி, 7. வாதிரியார் ஆகிய உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களை தேவந்திரகுல வேளாளர் என பொதுப் பெயரிட அக்குழு பரிந்துரைத்தது.** குழுவின் பரிந்துரையை ஏற்று, மேற்குறிப்பிட்ட 7 உட்பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இனி தேவந்திரகுல வேளாளர் என பொதுப் பெயரிட மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரைக்கும். மேலும், தேவந்திரகுல வேளாளர் என பொதுப் பெயரிட்டாலும் **மேற்குறிப்பிட்ட 7 சாதி உட்பிரிவிலும் தற்போதைய சமூக பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, பட்டியலின வகுப்பில் தொடரவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.** தேவேந்திரகுல வேளாளர் என்ற பொதுப் பெயரிட்டாலும்,

இக்குழுவினர் ஏற்கனவே பெறப்படும் சலுகைகள் அனைத்தும் தொடரும். இதற்கான உத்தரவினை அரசு விரைவில் பிறப்பிக்கும். இதற்கான மாநில அரசின் பரிந்துரை மீது மத்திய அரசின் ஆணையைப் பெற உரிய நடவடிக்கையை தமிழ்நாடு அரசு உடனடியாக மேற்கொள்ளும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், இன்று (10.12.2020) சென்னை, தலைமைச் செயலகத்தில், திரு. காமராஜ், I.P.S (ஓய்வு), திரு. வடிவேல், I.P.S (ஓய்வு), திரு. சண்முகவேல், I.P.S (ஓய்வு), திரு. கருப்பையா, I.F.S (ஓய்வு), திரு. தங்க கலியபெருமாள், I.A.S (ஓய்வு), திரு. இருளாண்டி, I.F.S (ஓய்வு), திரு. சுந்தரராஜன், I.F.S (ஓய்வு), திரு. ராஜேந்திரன், I.R.S. (ஓய்வு), திரு. தனசேகரன், I.R.S. (ஓய்வு), திரு. சங்கரன், I.R.S. (ஓய்வு) ஆகியோரும்,

தேவேந்திர குல மள்ளர் சேம்பர் ஆப் காமர்ஸ், தமிழ்நாடு அமைப்பைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,

தேவேந்திர சட்டப் பாதுகாப்பு மையத்தைச் சார்ந்த திரு.எஸ்.பாஸ்கர் மதுராம், மருதநில மக்கள் பண்பாட்டுக் கழகத்தைச் சார்ந்த திரு.அ.வியனரசு, மூவேந்தர் புலிப்படையைச் சார்ந்த திரு.சி.பாஸ்கர், டி.கே.வி. சமூக வழக்கறிஞர்கள் பேரவையைச் சார்ந்த திரு.பி.கனகராஜ், தேவந்திரகுல வேளாளர் சமூக அரசு ஊழியர் நல சங்கம் திரு.ஏ.கோதண்டராமன், திரு.சோலை பழனிவேல்ராஜன், மாவீரர் சுந்தரலிங்கனார் மக்கள்

இயக்கம் திரு.மாரியப்பாண்டியன், அகில இந்திய மள்ளர் எழுச்சிப் பேரவையைச் சார்ந்த திரு.மனுநீதிச் சோழன், தேக்கப்பட்டி பாலசுந்தரராசு பேரவையைச் சார்ந்த திரு.தேக்கப்பட்டி தெய்வேந்திரன், தேவேந்திரகுல சமூகம் திரு.ஆம்புலன்ஸ் முனியாண்டி, தேவேந்திர வேளாளர் நலச் சங்க நிர்வாகிகள் திரு.செ.செல்லதுரை, திரு.டி.கே.ஆர்.குருசாமி, டாக்டர் அன்பழகன் மற்றும் நிர்வாகிகள், சகோதர மறுமலர்ச்சி நலச் சங்கம் திருமதி ரேவதி ராஜேஷ், திரு.பன்னீர்செல்வம், திரு.அர்ச்சுனன், திரு.ராமையா, திரு.ரவி சங்கர், குளத்தூர் வட்டார தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம் திரு.பத்மனாபன், திரு.சோமசுந்தரம், தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம், பல்லாவரம் திரு.ரவிகுமார், திரு.மாரிமுத்து, திரு.ஐயப்பன் திரு.சுப்பையா, திரு.தங்கராஜ், தேவேந்திர பேரவை, ஆவடி, டாக்டர் எஸ்.ஹரிகோவிந்த், வேளச்சேரி தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம் திரு.முருகேசன், கீழ்க்கட்டளை தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம் திரு.ஆதினமிழகி, போரூர் தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம் திரு.நெப்போலியன், சிவகாமி நகர் தேவேந்திரகுல வேளாளர் நலச் சங்கம் திரு.முனியாண்டி, அரசியல் அதிகார அமைப்பு பேராசிரியர் பேச்சிமுத்து ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

உடன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலட்சுமி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. மாணிக்கம், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. மனோகரன் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**